4. (i) வீணை வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.
   (ii) இவ்வாத்தியத்தின் அமைப்பினை விளக்கி சுருதி சேர்க்கும் முறையினைக் கூறுக.
   (iii) இவ்வாத்தியத்தின் சிறப்புகளை தொகுத்துக் கூறுக.
   (iv) இவ்வாத்தியத்தை வாசித்து பிரபல்யம் பெற்ற வித்துவான்கள் **இருவரின்** பெயர்களைத் தருக.

5. கோபாலகிருஷ்ண பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றினையும் இசைப்பணியையும் பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க.
   (i) வாழ்க்கைக் காலம்
   (ii) பிறந்த இடம்
   (iii) பெற்றோர்
   (iv) இளமைக் கல்வி
   (v) வாழ்க்கைச் சம்பவங்கள்
   (vi) இசைப் பணி
   (vii) இயற்றிய உருப்படிகள் நான்கு
   (viii) இவரது சீடர்களில் இருவரின் பெயர்கள்

6. நீர் கற்ற ஆதிதாள வர்ணம் ஒன்றின் பூர்வாங்கப் பகுதியை ஸ்வரதாள அங்க அடையாளங்களுடன் எழுதுக. (இராகம், ஆரோகண அவரோகணம், மேள எண், ஜன்னியராகமெனின் தாய்ராகத்தின் மேள எண், இயற்றியவர் பெயர் என்பவை குறிப்பிடப்படல் வேண்டும்.)

7. (i) ஜனக இராகங்களின் **நான்கு** இலட்சணங்களையும் தருக.
   (ii) (அ) ஜன்னிய இராகம் என்றால் என்ன?
   (ஆ) அவற்றின் **ஏழு** பிரிவுகளையும் தருக.
   (இ) ஜன்னிய இராகத்தின் ஏழு பிரிவுகளுள் **மூன்றினை** உதாரணங்களுடன் விளக்குக.

**அல்லது**

இந்தியாவில் "17ஆம் 18ஆம் நூற்றாண்டு கர்நாடக இசை வளர்ச்சியில் ஒரு பொற்காலம் என வர்ணிக்கப்படுகிறது" இக்கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க.

* * *

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka